DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 196/2024** |
| Deposition of Witness for | : | **P.W.8** |
| Name | : | **பஞ்சவர்ணம்** |
| Husband Name | : | **கார்மேக சுதர்சன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி சிறையிலிருந்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 16.04.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் மெய்யனூர் ஆகும். அ.சா.1 வித்யா எனது அண்ணன் மனைவி ஆவார். அ.சா.1 வித்யா தேவகோட்டையில் குடியிருந்து வருகிறார். சாட்சி கவிதா என்பவர் எனது அண்ணியின் வீட்டுக்கருகே குடியிருந்து வருகிறார். கடந்த 25.01.2022ம் தேதி நான் சென்னையில் எனது வீட்டில் இருந்தபோது அதிகாலை அளவில் தேவகோட்டையில் எனது அண்ணியின் வீட்டுக்கருகே குடியிருக்கும் நபர் ஒருவர் எனது அண்ணன் கணேசன் என்பவருடைய வீடு தீப்பற்றி எரிவதாக சொன்னார். நான் உடனே எனது அண்ணியான அ.சா.1 வித்யாவிடம் முடிக்கரையில் இருந்தவரிடம் தகவல் தெரிவித்தார்.

2. எனது அண்ணி அ.சா.1 வித்யா உறவினர் இறப்பு சம்மந்தமாக முடிக்கரைக்கு அப்போது சென்றிருந்தார். உடனே எனது அண்ணி தேவகோட்டையில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று பார்த்தார். நான் மறுநாள் எனது அண்ணியின் வீட்டிற்கு வந்தபோது வீட்டின் கீழ் பகுதியில் முழுவதும் தீயில் எரிந்து விட்டது. வெள்ளிப்பொருட்கள் சிலவற்றை தீயில் உருகியதாக சொன்னார். பின்பு எனது அண்ணியான அ.சா.1 வித்யா இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு போன் மூலமாக எத்தனை மணிக்கு தகவல் சொன்னார்கள் என்றால் விடியற்காலை எத்தனை மணி என்று தெரியவில்லை. எனக்கு போன் செய்தது ஆணா அல்லது பெண்ணா என்றால் ஆண் தான் போன் செய்தார். அவர் எனக்கு தெரிந்த நபரா என்றால் பக்கத்து வீட்டுக்காரார் அவர் எனக்கு தெரியாது. நான் போய் பார்த்தபோது வெள்ளிப்பொருட்கள் உருகியிருந்ததை நான் பார்த்தேனா என்றால் அ.சா.1 வித்யா எடுத்து வைத்திருந்ததை எனக்கு காட்டினார். நான் எப்போது பார்த்தேன் 26.01.2022ம் தேதி காலையில் பார்த்தேன். சம்பவம் பற்றி எனக்கு நேடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 வித்யா புகார் கொடுக்க போன விபரமும் மற்றும் புகாரில் என்ன எழுதியிருந்தார் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் திருடு போனது சம்மந்தமாக கொடுத்தார்களா அல்லது வீடு எரிந்தது சம்மந்தமாக கொடுத்தார்களா என்றால் எனக்கு எதுவும் தெரியாது.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.16 11:10:32

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**